## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. மஞ்சுளா | அசல் வழக்கு எண். | 51/2015 |
| க/பெ. | - | கிருஷ்ணமூர்த்தி | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

23.10.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வழக்கு சொத்துக்கள் வீரப்ப கவுண்டருக்கு உரிமையானது என்றால் சரிதான். வீரப்ப கவுண்டர் என்பவருக்கு கோபால் மற்றும் கந்தசாமி என இரண்டு மகன்கள் என்றால் சரிதான். வீரப்ப கவுண்டருக்கு எத்தனை பெண் பிள்ளைகள் என்றால் ராஜகுமாரி மற்றும் அஞ்சா என்ற இரு பெண் பிள்ளைகள். கோபால் மகன்கள் சந்திரவேல் மற்றும் 1ம் வாதி கிருஷ்ணமூர்த்தி என்றால் சரிதான். கந்தசாமி என்பவரின் ஒரே பெண் பிள்ளை அங்கையர்கன்னி (1ம் பிரதிவாதி) என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் சந்திரவேல், கிருஷ்ணமூர்த்தி (எ) மூர்த்தி (1ம் வாதி) மற்றும் அங்கையர்கன்னி (1ம் பிரதிவாதி) ஆகியோர்களுக்கு உரிமையானது என்றால் சரிதான். கோபால் என்பவர் 13.12.1986 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் வாதி, 1ம் பிரதிவாதி, சந்திரவேல், ராஜகுமாரி, அஞ்சா ஆகியோர்கள் கோபால் என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். கந்தசாமி என்பவர் 29.02.2004 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கந்தசாமி என்பவரின் ஒரே வாரிசு 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பொறுத்து கோபால் என்பவருக்கும் கந்தசாமி என்பவருக்கும் இடையே எந்த பாக பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். கோபால் இறந்த பின்பு கந்தசாமி என்பவர் தான் வழக்கு சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்துக்களின் பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால் 1ம் வாதி பெயரில் உள்ளது. கந்தசாமி என்பவர் 1ம் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். சந்திரவேல், 1ம் வாதி ஆகியோரின் சம்மதத்தின் பேரில் தான் கந்தசாமி 1 ஏக்கர் 38 செண்ட் பூமியை 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த சொத்தை வழக்கில்

சேர்க்கவில்லை என்றால் சரிதான். மீதமுள்ள சொத்தை பொறுத்து சந்திரவேல், 1ம் வாதி, 1ம் பிரதிவாதி ஆகியோருக்கு இடையில் எவ்வித பாகமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும் கந்தசாமி என்பவருக்கும் எவ்வித விரோதமும் இல்லை என்றால் சரிதான். கந்தசாமி 1ம் பிரதிவாதியுடன் ஐவேலி என்ற ஊரில் தான் வசித்து வருகிறார் என்றால் இல்லை, கந்தசாமி என்பவர் மனைவேலிபட்டு என்ற ஊரில் குடியிருந்து வருகிறார். கந்தசாமி என்னுடன் குடியிருந்து வந்ததற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எங்களுக்கு உயில் எழுதி வைத்துள்ளார். கந்தசாமி என்னுடன் குடியிருந்து வந்ததற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக ஒன்றாக குடியிருந்து வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கந்தசாமி என்பவர் 1ம் வாதிக்கும் சந்திரவேல் என்பவருக்கும் உயில் எழுதி வைத்தாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கந்தசாமி உயில் எழுதிய போது நான் உடன் இல்லை என்றால் சரிதான். உயில் பதிவு செய்தபோதும் நான் உடன் இல்லை என்றால் சரிதான். நான் சொல்லும் உயில் கந்தசாமி எழுதி உயில் இல்லை என்றால் சரியல்ல. அந்த உயிலிலுள்ள கையெழுத்து கந்தசாமியின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. அந்த அசல் உயில் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, என்னுடைய வீட்டில் உள்ளது.

3. சந்திரவேல் மற்றும் கிருஷ்ணமூர்த்தி எந்த வருடம் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சந்திரவேல் இறந்த பின்பு சந்திரவேலுவின் மகனான குமாரவேலும் கிருஷ்ணமூர்த்தியும் கடந்த 2011 – 2012 கால கட்டத்தில் பாகம் பிரித்துக்கொண்டனர். மேற்படி விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் வழக்குரையில் 1ம் வாதி மற்றும் சந்திரவேல் ஆகியோர்கள் தான் பாகம் பிரித்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. யார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசி பாகம் பிரிக்கப்பட்டது என்றால் பஞ்சாயத்து பேசவில்லை அண்ணன் தம்பிக்கு இடையே பேசி அவர்களே பிரித்து கொண்டார்கள். 1ம் வாதி மற்றும் சந்திரவேல் ஆகியோர் சம்மதத்தின் பேரில் தான் பாகம் பிரிக்கப்பட்டது என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சந்திரவேலுக்கும் கிருஷ்ணமூர்த்திக்கும் சம பாகம் என்றால் சரிதான். இருவரும் சம பாகமாக பிரித்துக்கொள்ளவில்லை என்றால் பாண்டிச்சேரியிலுள்ள சொத்தை சந்திரவேல் எடுத்து கொண்டார் தமிழ்நாட்டில் உள்ள சொத்தை கிருஷ்ண்முர்த்திக்கு கொடுத்தார்கள். பாக பிரிவினையில் எவ்வளவு ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டது என்றால் 1ம் வாதிக்கு தமிழ்நாட்டில் 5 1/2 ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டது. பாண்டிச்சேரியில் ஒதுக்கிய பூமியின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. சந்திரவேல் என்பவருக்கு 34 1/2 செண்ட் பூமி கிடைத்தாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் பாக பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்றும்

1ம் வாதிக்கு 5 1/2 ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சந்திரவேல் என்பவருக்கு 34 1/2 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி 2ம் வாதி பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்த போது நான் உடன் இல்லை என்றால் சரியல்ல, நான் இருந்தேன். எந்த வருடம் 2ம் வாதி பெயரில் செட்டில்மெண்ட் எழுதப்பட்டது என்றால் 2011 – 2012 காலகட்டத்தில் எழுதப்பட்டது. எத்தனை ஏக்கர் பூமி 2ம் வாதி பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்டது என்றால் 5 1/2 ஏக்கர் பூமி. அந்த செட்டில்மெண்ட் ஆவணம் தான் வா.சா.ஆ.3 என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் யார் எல்லாம் சாட்சி கையெழுத்து செய்தனர் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தை யார் தயார் செய்தது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் 1ம் வாதிக்கு பாகமாக கிடைத்த சொத்துக்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணம் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4. வழக்கு சொத்துக்கள் சந்திரவேல், 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட கூட்டு குடும்ப சொத்து என்றால் சரியல்ல. சந்திரவேல் என்பவரின் மனைவி, மகன் மற்றும் மகள்கள் சேர்ந்து 1ம் வாதிக்கு வா.சா.ஆ.4 ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் எழுதிய போதும் பதிவு செய்தபோதும் நான் உடன் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தை எழுதி கொடுப்பதற்கு சாரதா வகையறாவிற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் 1ம் பிரதிவாதியை ஏமாற்றுவதற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

5. கோபால் மற்றும் கந்தசாமி இறந்த பின்பு வழக்கு சொத்திற்கான பட்டா 1ம் வாதி பெயரில் மாறியுள்ளது என்றால் சரிதான். 1ம் வாதி குடும்பத்தில் பெரியவர் என்பதால் அவர் பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் நாங்கள் பயிர் வைத்து வந்ததால் 1ம் வாதி பெயரில் மாறியுள்ளது. 1ம் வாதியும் பொது குடும்பத்திற்காக தான் தீர்வை செலுத்தி வந்தார் என்றால் 1, 2 வாதிகள் பெயரில் நிலம் இருந்ததால் வரி செலுத்தப்பட்டது. 1ம் வாதி, சந்திரவேல் ஆகியோர்கள் 1ம் பிரதிவாதியின் ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்பதால் தான் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தனர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் சம்மதத்தின் பேரில் தான் 1ம் வாதியும் சந்திரவேலும் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தனர் என்றால் சரிதான், அவர்கள் எதுவும் கேட்கவில்லை. வழக்கு சொத்துக்களில் இருந்து அறுவடைசெய்த பயிர்களை 1ம் வாதி 1ம் பிரதிவாதிக்கு கொடுத்து வந்தார் என்றால்

சரிதான். 2014 ம் ஆண்டில் இருந்து என் கணவரான 1 ம் வாதியும் , சந்திரவேலுவும் 1 ம் பிரதிவாதிக்கு பயிர்கள் கொடுப்பதை நிறுத்திவிட்டனர் என்றால் சரியல்ல, இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் நாங்கள் எதுவும் கொடுக்கவில்லை. நாங்கள் எதுவும் கொடுக்காததால் தான் பாகம் கேட்டு 1 ம் பிரதிவாதி 2014 ஆம் ஆண்டில் எங்களுக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் அறிவிப்பு அனுப்பப்பட்டது. வழக்கு சொத்தில் 1 ம் பிரதிவாதிக்கும் பங்கு உள்ளது என்றால் சரியல்ல, தற்போது உயில் எழுதப்பட்டுவிட்டது. வழக்கு சொத்தில் அனைவருக்கும் கூட்டு உரிமை உள்ளது என்பதால் வாதிகள் மட்டும் விளம்புகை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி கூட்டு பங்குரிமையர் என்பதால் அவருக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

6. ராஜகுமாரி மற்றும் அஞ்சா ஆகியோர்களுக்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ள நிலையில் அவர்களை தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல, அவர்கள் எந்த பங்கும் கேட்கவில்லை. பாக பிரிவினை பரிகாரம் கேட்காமல் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உண்மையை மறைத்து பொய்யான பொருண்மைகளுடன் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif
Vanur.